DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 07.08.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No.97/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW.2 |
| Name | : | வினோத் கன்னா (இந்தியன் வங்கி மேலாளர்) |
| Father Name | : | ஸ்ரீராமலு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E.Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 07.08.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**
**<u>விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(02.55.P.M):-</u>**

**<u>முதல் விசாரணை:-</u>**

1. நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், இந்தியன் வங்கி ஏற்காடு கிளையில் முதுநிலை மேலாளராக ஜீன் 2026-ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகின்றேன். நீதிமன்றத்திலிருந்து பெற்ற அழைப்பாணை அடிப்படையில் காசோலை மோசடி வழக்கில் அருள் பிரேம் குமார் என்பவரின் வங்கி கணக்கு விவரங்கள் குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தற்போது நான் தாக்கல் செய்யும் ஆவணம் அருள் பிரேம் குமார் என்பவர் எங்களது வங்கியில் பராமரித்து வரும் வங்கி கணக்கு எண்.6242123626-ன் விவரங்கள் அடங்கியது. **மேற்படி ஆவணமானது ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. புகார்தாரர் 24.04.2025–ம் தேதியன்று பாரத ஸ்டேட் பேங்க் காசோலை எண்.905820–ஆனது ரூ.8,50,000/– தொகைக்காக எங்கள் வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி காசோலையானது 24.04.2025–ம் தேதியன்று **CHEQUE STOPPED BY DRAWER** என்ற காரணம் காட்டி திருப்பப்பட்டு 02.05.2025–ம் தேதியன்று குறிப்பாணையுடன் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கணக்கு விவரம் மற்றும் காசோலை தாக்கல் செய்யப்பட்டு திருப்பப்பட்ட விவரம் அடங்கிய விவரத்தினை தற்போது வழக்கில் தாக்கல் செய்கின்றேன். காசோலை மதிப்பிழந்ததற்கு காரணம் காட்டி குறிப்பாணை தரப்பட்டது என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்ட வங்கி கணக்கு எண் எப்போது தொடங்கப்பட்டது என்றால் அதுகுறித்து ஆவணங்கள் தற்போது என்வசத்தில் இல்லை. அதற்கான ஆவணத்தினை என்னால் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். புகார்தாரர் எனது வங்கியில் அடிக்கடி காசேலையை வசூலுக்காக தாக்கல் செய்வார் என்றால் செய்யலாம். அவ்வாறு புகார்தாரர் தாக்கல் செய்த காசோலை வசூலும் செய்யப்பட்டுள்ளது, திருப்பப்பட்டும் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. பொதுவாக கசோலை வசூலுக்காக தாக்கல் செய்யும் முன் காசோலையின் பின்புறம் காசோலை அளிப்பவரின் கையெழுத்தினை வங்கி அலுவலர் சரிபார்ப்பது வழக்கம் என்றால் வசூலுக்கு தாக்கல் செய்யும் போது சரிபார்ப்பது வழக்கம் இல்லை.

2. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணத்தில் பணம் பெறுபவர் என்ற இடத்தில் பணத்தின் மதிப்பினை எழுத்தால் குறிப்பிடப்பட்டும் அதற்கு மேலே புகார்தாரர் பெயரும் குறிப்பிடப்பட்டு வழங்கிய காசோலையானது வங்கியின் வரைமுறை படி ஏற்கதக்கதா என்றால் ஏற்கதக்கது. மேற்படி சங்கதி தவறு என்றும், குறிப்பிடப்பட்ட இடத்தில் பணத்தினை மதிப்பினை எழுத்தால் எழுதாமல் குறிப்பிடதா வேறு இடத்தில் பணத்தின் மதிப்பினை எழுதியது INTERPOLATIONS என்று இந்திய சட்டங்களில் வரையறுக்கப்பட்டு அவ்வாறு உள்ள காசோலை செல்லதக்கதல்ல என்று உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்தாரரின் வங்கி கணக்கு எண்ணிற்குரிய STATEMENT தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யும்போது PAYMENT STOPPED என்று திருப்பப்பட்டால் பொதுவாக வங்கி கணக்கிற்குரிய நபரின் கணக்கிலிருந்து அதற்கான அபராத தொகை கழிக்கப்பட்டு, PAYMENT STOPPED என்பதற்குரிய ஆவணத்தினை எங்களது வங்கியில் உள்ள உரிய வங்கி கணக்கின் ஆவணத்தில் வைத்திருப்போம் என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 03.20.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.